# இப்பொழுதே ஒரு சதம்! நாடும் இயக்கம் - வினாவிடை



## ஒரு சதம் ஏன்?

மத்திய, மாகாண அரசுகளை விட ரொறன்ரோ மாநகராட்சி மன்றமே எமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் சேவைகளை அதிகம் வழங்கி வருகிறது: காவல் துறை, தீயணைப்புச் சேவை, ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம், வீதிகள், சோலைகள், காப்பகங்கள், வீடமைப்பு, மீள்பாவனைக்கிடல், பொழுதுபோக்கு வசதிகள், நூலகங்கள், இன்னும் பல.

எனினும், ஒரு பாரிய நிதிய இடைவெளி ஒன்று விழுந்துள்ளது. ரொறன்ரோ மாநகரத்தால் ஆற்றக்கூடிய பணிகள் ஒருபுறம். அதேவேளை பொருள்வளப் பெருக்கம் களைகட்டுவதற்கும், மக்கள் வாழ்ந்து, உழைத்து, விளையாடும் இடமாய்த் திகழ்வதற்கும் அது ஆற்றவேண்டிய பணிகள் மறுபுறம். அடிப்படைக் கட்டமைப்பு, தொழிற்பாடு என்பவற்றுக்கான செலவுகளுக்கும் வருமானத்துக்கும் இடையே 110 கோடி டாலர் வேறுபாட்டை ரொறன்ரோ மாநகரம் எதிர்நோக்குவதாக 2005ல் கனடா கலந்தாய்வுச் சபை கணிப்பிட்டது. அதாவது அடிப்படைக் கட்டமைப்பினைப் பேணும் பணிகள் பலவும் நிறைவேறாது தேங்கிக் கிடக்கின்றன. அதேவேளை மாநகரத்துக்குத் துணைநிற்கும் புதிய திட்டங்களில் முதலீடுசெய்யவும் வேண்டியுள்ளது.



அதற்காகவே – எமது மக்கள்தொகை பெருகுந்தோறும் மேற்படி சேவைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும், புதிய திட்டங்களில் முதலீடு செய்வற்குமாகவே – தற்போதைய பொருள்-சேவை வரியில் எமது மாநகரத்துக்கு இப்பொழுதே ஒரு சதம் தேவை!

பொருள்வளத்துடன் சேர்ந்து உறுதியாய் நிலைநின்று பெருகும் நிதிவளத்தின் தோற்றுவாயாக அமையும் வண்ணம் தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதத்தை **மீளக் கொடுக்குமாறு** மத்திய அரசை ரொறன்ரோ மாநகரமும் மற்றும் பிற கனடிய மாநகரங்களும் கேட்டுக்கொள்கின்றன. எமது மாநகரங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடு, கனடாவில் மேற்கொள்ளப்படும் முதலீடாகும்.

ரொறன்ரோ போன்ற மாநகரங்கள் எமது பொருள்வளத்தை வலுப்படுத்தி, வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்து, முதலீட்டை ஈர்ப்பவை. இதனால் எம் அனைவருக்கும் நன்மை கிட்டுகிறது. எனினும் வருமான வளங்கள் அறவே மட்டுப்பட்டுள்ளதால், மாநகரங்கள் நலிவடைந்து வருகின்றன.

மத்திய, மாகாண அரசுகளின் பொருள்வளம் பெருகுந்தோறும் அவற்றுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் வளங்களும் பெருகிவருகின்றன. எடுத்துக்காட்டுகள்:

- விற்பனை வரி
- வருமான வரி
- தாபன வரி
- மூலவள வரி
- இறக்குமதித் தீர்வை

இவ்வரிகள் மாநகரங்களுக்குக் கிடையா. மாநகரங்களுக்குப் பெருமளவு நிதி சேர்க்கும் உடைமை வரி ஓரளவுக்கே கைகொடுக்க வல்லது. பொருள்வளம், சமூக நலம் என்பவற்றைக் காப்பதற்கு மாநகரங்கள் மேற்கொள்ளவேண்டிய அனைத்தையும் ரொறன்ரோ மாநகரத்தால் மேற்கொள்ள முடியாது – சேவைகளையும் மேற்கொண்டு, புதிய வீதிகளையும் அமைத்து, மக்களின் போக்குவரத்தையும் மேம்படுத்தி, அன்று மாகாண அரசின் செலவில் மேற்கொள்ளப்பட்டு இன்று மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள் போன்றவற்றுக்குத் தொடர்ந்தும் செலவுபொறுக்க முடியாது. இவை ரொறன்ரோ மாநகர் மீதும் அதன் வரியிறுப்பாளர்கள் மீதும் ஓர் அநியாயமான, தாங்கமுடியாத சுமையை ஏற்றியுள்ளன.

## தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதம் எதற்காக?

தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதம் என்னும் கணக்கின்படி எமது மாநகரத்துக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 41 கோடி டாலர் கிடைக்கும். அது ஒரு நிலைத்த, முன்கூட்டியே கணிக்கத்தக்க நிதிவளமாய் அமையும். வீதிகளை அமைப்பதற்கும், போக்குவரத்துத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் அது வழிவகுக்கும். ரொறன்ரோ மாநகரம் மேலும் தூய்மையும் பசுமையும் அடைவதற்கு அது உதவும். பொழுதுபோக்கு நிலையங்கள், சோலைகள் போன்ற மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்துவதற்கும் அது துணைநிற்கும்.

*பொருள்-சேவை வரியைக் குறைக்க வாய்ப்புள்ளது* என்று மத்திய அரசே தெரிவித்துள்ளது. பொருள்-சேவை வரியைக் குறைக்க வாய்ப்புள்ளது என்றால், தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதத்தை, எமது மாநகரங்களை மேம்படுத்துவதில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பிருந்தாக வேண்டும் என்றே ரொறன்ரோ மாநகரமும் மற்றும் பிற கனடிய மாநகரங்களும் கருதுகின்றன.

### தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதம் போதுமா?



பொருள்வளம் பெருகுந்தோறும் உறுதியாய் நிலைநின்று பெருகும் நிதிவளத்தையே ரொறன்ரோ உட்படக் கனடிய மாநகரங்கள் அனைத்தும் நாடுகின்றன. தற்போதைய பொருள்-சேவை வரி அத்தகைய ஒரு நிதிவளமாகும். ஏனைய தரப்புகளும் இதனை ஒப்புக்கொள்கின்றன!

கனடிய மாநகரங்கள் நிதிவளம் குறைந்தவை, செலவுச்சுமை மிகுந்தவை, பொருள்வளம் பெருகுந்தோறும் நிலைநின்று பெருகும் நிதிவளம் வேண்டியவை என்று வணிக சபைகள், தொழில்துறை அவையங்கள் போன்ற அமைப்புகள் பலவும் பல்லாண்டுகளாய் வாதிட்டு வந்துள்ளன. அத்தகைய ஓர் அமைப்பே கனடா கலந்தாய்வுச் சபை. அதன் *Mission Possible: Successful Canadian Cities* என்னும் அறிக்கையைப் பார்க்கவும்.

## மாநகரம் வழங்கும் சேவைகள் எவை, உடைமை வரிகள் எவ்வாறு செலவிடப்படுகின்றன?

காவல் துறை முதல் ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம், தீயணைப்புச் சேவைகள், காப்பகங்கள், வீடமைப்பு வரை. சமூக சேவைகள் முதல் வனங்கள், சோலைகள், பொழுதுபோக்குகள், ஏற்றியிறக்கல், கழிவு கையாளல் வரை. இவை ரொறன்ரோ மாநகரம் உங்களுக்கு வழங்கும் சேவைகளுள் ஒருசிலவே ஆகும்.

இம்மாநகரத்தில் வசிக்கும் ஒரு சாதாரண வரியிறுப்பாளர் 2006ல் $2,093 (அன்றாடம் $5.74) உடைமை வரி செலுத்தினார். 2006ல் உடைமை வரி செலவிடப்பட்ட விதத்தைப் பார்க்கவும்.

## இப்பிரச்சனைகளை எதிர்கொள்வதில் மாநகரத்துக்குத் தேவைப்படுவது எது?

நிதிவளப் பிரச்சனைகளை நிரந்தரமாய்த் தீர்ப்பதற்காக ரொறன்ரோ மாநகரமும் பிற மாநகரங்களும் மூன்று விடயங்களை நாடி நிற்கின்றன:

1. எமது மக்கள்தொகை பெருகுந்தோறும் அவர்களுக்கு வேண்டிய சேவைகளை மேற்கொண்டு, புதிய திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஏதுவாக, தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதம் போன்ற ஒரு பங்கு – பொருள் வளத்துடன் சேர்ந்து பெருகும் வருமானத்தில் ஒரு பங்கு.
2. மாநகரங்களுக்கு கிடைக்கும் நிதிவளங்களுக்கு உசிதமான முறையில் அவை வகிக்கும் பங்கினையும் பொறுப்புகளையும் மீட்டியமைத்தல் – ரொறன்ரோ மாநகரத்தைப் பொறுத்தவரை, அன்று மாகாணத்தால் மேற்கொள்ளப்பட்டு, இன்று ரொறன்ரோ மாநகரத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களை மீண்டும் மாகாணமே மேற்கொள்ளுமாறு பார்ப்பது இதனுள் அடங்கும். அன்று மாகாணத்தால் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டங்களுக்கு இன்று ரொறன்ரோ மாநகரம் $75 கோடி டாலருக்கு மேற்பட்ட தொகையைச் செலவிட்டு வருகிறது.
3. ஒரு தேசிய போக்குவரத்துத் திட்டம் – 8 நாட்டுக் குழுமத்தில் கனடா மட்டுமே தேசிய போக்குவரத்துத் திட்டம் எதுவுமற்ற நாடு. துரித போக்குவரத்து போன்ற பெரும் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்காகும் செலவினை இறுப்பதற்கு நிலைத்த நெடுங்கால நிதிவளம் தேவை.

## மத்திய, மாகாண அரசுகள் ஏற்கெனவே பொருளுதவி புரிகின்றன. அது போதாத காரணம் என்ன?

மாநகரங்களுக்கு மத்திய, மாகாண அரசுகள் ஓரளவு பொருளுதவி புரிவது உண்மையே. எனினும் ரொறன்ரோ மாநகரத்தாலும் மற்றும் பிற கனடிய மாநகரங்களாலும் ஆற்றக்கூடிய பணிகள் ஒருபுறம். அதேவேளை தமது பொருள்வளத்தை வலுப்படுத்தி, முதலீட்டை ஈர்ப்பதற்கு அவை ஆற்றவேண்டிய பணிகள் மறுபுறம். இவை இரண்டுக்கும் இடையே ஒரு பாரிய நிதிய இடைவெளி விழுந்துள்ளது.



தாம் மாநகரங்களுக்கு வழங்கும் பணம் போதாது என்பதை மத்திய, மாகாண அரசுகள் ஏற்றுக்கொள்கின்றன. ஆண்டுதோறும் சடையும் திட்டங்களால் கனடாவில் ஒரு “கையேந்தும் தரப்பு” தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மற்றும் பிற மாநகரங்களைப் போலவே ரொறன்ரோ மாநகரமும் பொருள்வள வளர்ச்சிக்கு வேண்டிய புதிய அடிப்படைக் கட்டமைப்புகளுக்குச் செலவு பொறுக்கும் அதேவேளை, ஒன்றில் உள்ளூர்த் திட்டங்களுக்குத் துணைநிற்பதா அல்லது வீதிகளைப் பழுதுபார்ப்பதா என்று அது தீர்மானிக்க வேண்டியுள்ளது.

கட்டம் கட்டமாக எரிபொருள் வரியைப் பகிர்ந்து (2006ல் 1.5 சதம், 2007-08ல் 2 சதம் செலுத்தி), மாநகரங்கள் மேற்கொள்ளும் கொள்வனவுகளுக்கான பொருள்-சேவை வரியைத் தள்ளுபடிசெய்து, மாநகரங்களின் போக்குவரத்துத் துறைக்கு மத்திய அரசு ஓரளவு நிதியுதவி புரிந்துள்ளது.

போக்குவரத்துத் துறை, நோயாளர் ஊர்திச் சேவை, மக்கள் நலவாழ்வுத் துறை என்பவற்றுக்கு அளிக்கும் உதவுதொகையை ஒன்ராறியோ மாகாண அரசு அதிகரித்தது. அதன் எரிபொருள் வரியில் ஒரு கூறினை அது பகிர்ந்து கொடுத்தது. அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இன்று ரொறன்ரோ மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் ஆண்டுதோறும் விளையும் வரவு-செலவுத் திட்டப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு மட்டுப்பட்ட அளவில் ஒரேயொரு தடவை அது ஓரளவு நிதியுதவி புரிந்தது.

அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இன்று மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் விளையும் பிரச்சனைகளை எதிர்கொள்வது பற்றி மாநகரமும் மாகாணமும் தொடர்ந்து உரையாடி வருகின்றன. அதேவேளை அவற்றுக்கான செலவைத் தொடர்ந்தும் இறுத்து வருவது உடைமை வரியிறுப்பாளர்களும் மாநகரமுமே.

## தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதத்தை ரொறன்ரோ மாநகரத்துக்கு வழங்குவதற்கு மத்திய அரசு ஏற்கெனவே ‘மறுப்பு’ தெரிவித்துள்ளது. மத்திய அரசின் நிலைப்பாடு மாறும் என்று நீங்கள் கருதுவதற்கு காரணம் என்ன?

கனடிய மாநகரங்களில் வாழும் மக்களின் நியாயமான தேவைகளை மத்திய அரசினால் புறக்கணிக்க முடியாது. எரிபொருள் வரியில் ஒரு பகுதியைப் பகிர்வதற்கு அது முதலில் ‘மறுப்பு’ தெரிவித்தது. அப்புறம் அதனைப் பகிரும் நல்லரசுக் கொள்கையை ஏற்றுக் கடைப்பிடிக்க அது முன்வந்தமை கவனிக்கத்தக்கது.

கனடிய மக்களுள் ஏறக்குறைய 80 விழுக்காட்டினர் மாநகரங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். இந்நாட்டின் மாபெரும் நகரம் ரொறன்ரோவே. கனடாவின் பொருள்வளத்துக்கு உந்துவிசையாய் விளங்குவதும் ரொறன்ரோவே என்று கொள்ளப்படுகிறது. மத்திய, மாகாண அரசுகளுக்கு கோடிக்கணக்கான பணத்தை வாரிவழங்குவதும் ரொறன்ரோவே. அதற்குக் கைமாறாக அது வெறும் சேவைகளையே பெற்று வருகிறது.

எமது வேண்டுகோளை மத்திய அரசு புறக்கணிக்கும் வாய்ப்பு உள்ளதனால்தான் இவ்வியக்கம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இன்னும் கொஞ்சக் காலத்துள் மத்திய அரசுக்கான தேர்தல் இடம்பெற்றால், ரொறன்ரோ உட்பட அனைத்து மாநகரங்களிலும் வாழும் மக்களும், இயங்கும் தொழிலகங்களும் இம்முக்கிய பிரச்சனை பற்றிய தமது நிலைப்பாட்டினைக் குறித்து சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுடன் உரையாடுவதற்குத் தயாராய் இருக்க வேண்டும். இவ்வியக்கத்தின் பலாபலன் எவ்வாறு அமைந்தாலும், கனடாவின் மிகப்பெரிய நகரம் என்ற வகையில் ரொறன்ரோ மாநகரம் அதன் விருத்தியையும் சேவைகளையும் பேணிக்கொள்வதற்கு வேண்டிய நிதிவளத்தை ஈட்டும் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

## ரொறன்ரோ மாநகரம் அதன் சொந்தத் தேவைகளுக்கு நிதியொதுக்க முடியாத காரணம் என்ன?



ரொறன்ரோ மாநகரம் தற்பொழுது இறுக்கும் செலவினங்களை இறுப்பதற்காக வகுக்கப்பட்டதல்ல உடைமை வரி. உடைமை வரியில் ஏற்படும் ஒரு சதவீத அதிகரிப்பு ஒவ்வொன்றினாலும் இம்மாநகரத்துக்கு $1.8 கோடி தொகை மாத்திரமே தேறுகிறது. ஏன்? ஏனெனில் ஒருவரின் செலுத்துமதி ஆற்றலை விடுத்து, அவருடைய ஆதனப் பெறுமதியின்படியே உடைமை வரி நிர்ணயிக்கப்படுகிறது. அதேவேளை, நுகர்வோர் என்ற

வகையில் ஒருவரின் செலுத்துமதி ஆற்றலே நாட்டின் பொருள்வளத்தைப் பெருக்குகிறது – பொருள்வளத்துடன் சேர்ந்து பெருகும் வருமானமே மாநகரங்களுக்குத் தேவை.

மறுபுறம், பொருள்வளம் பெருகுந்தோறும் மத்திய, மாகாண வருமான, விற்பனை வரிகள் விலையேற்றத்துடன் சேர்ந்து அதிகரித்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளில் ரொறன்ரோ மாநகரத்தில் திரட்டப்பட்ட மாகாண விற்பனை வரி, பொருள்-சேவை வரி வாயிலாக ஈட்டப்பட்ட வருமானத்தில் ஆண்டுதோறும் $10 கோடிக்கும் மேற்பட்ட அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக மத்திய, மாகாண வருமானத்தைப் போலன்றி, ரொறன்ரோ மாநகர வருமானம் மிகவும் குறைவாகவே அதிகரித்து வந்துள்ளது. எனினும் தொழில்துறை, சுற்றுலாத்துறைகளில் அமெரிக்க, ஐரோப்பிய மாநகரங்களுடன் ரொறன்ரோ மாநகரம் போட்டியிட்டு வருகிறது. உள்ளூர் வரிகள், கட்டணங்கள், **அத்துடன்** பொருள்வளத்துடன் சேர்ந்து பெருகும் வருமானம் ஆகியவை இணைந்த நிதிவளம் படைத்தவையாய் அம்மாநகரங்கள் விளங்குகின்றன. வெல்லும் மாநகரங்களுக்கு வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பினைப் பேணிக்கொள்வதற்குப் பல்வேறு வருமான வளங்கள் தேவை. ஆனால் ரொறன்ரோ மாநகரம் தொழிற்படுவதற்கு வேண்டிய வருமான வளங்களோ மட்டுப்பட்டவை.

## ரொறன்ரோ மாநகரத்துக்குத் தேவைப்படும் பணத்தை திரட்டுவதற்கு வேண்டிய அதிகாரத்தை *ரொறன்ரோ மாநகரச் சட்டம்* அதற்கு வழங்குகிறதா?

இல்லை. ஒரு மாநகரத்தை மிகவும் சிறப்பாகவும் பொறுப்புணர்வோடும் நிர்வகிக்கும் ஓர் ஆட்சி மன்றமாய் அமைவதற்கு வேண்டிய நெகிழ்வியல்பை ரொறன்ரோ மாநகரத்துக்கு அளிக்கும் நோக்குடனேயே இப்புதிய சட்டம் இயற்றப்பட்டது. வரி அறவிடும் அதிகாரங்கள் சில அதற்கு உண்டு. ஆனால் அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இன்று மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், மாநகரத்தின் அடிப்படைக் கட்டமைப்பு, தொழிற்பாடு ஆகியவற்றுக்கான செலவுகளுக்கும் வருமானத்துக்கும் இடையே விழுந்துள்ள ஏறக்குறைய $110 கோடி இடைவெளி முதலியவற்றுக்கு வேண்டிய நிதிவளத்தை இவ்வதிகாரங்களைக் கொண்டு என்றுமே தேடிக்கொள்ள முடியாது.

## வருமானத்தைப் பொறுத்தவரை மாநகரம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எவை?

மத்திய, மாகாண, வருமான வரி, உடைமை வரி உட்பட ரொறன்ரோ வாசிகள் செலுத்தும் வரி முழுவதையும் பொறுத்தவரை ஒவ்வொரு டாலர் வரியிலும் ஏறத்தாழ எட்டுச் சதம் மட்டுமே மாநகரத்துக்குக் கிடைக்கிறது. இந்த எட்டுச் சத வரிப் பணத்தைக் கொண்டே காவல் துறை, போக்குவரத்து, தீயணைப்பு, அவசர சேவைகள், வீதிகள், சோலைகள், பொழுதுபோக்கு, கழிவுப்பொருள் கையாள்கை, மீள்பாவனைக்கிடல் உட்பட்ட முக்கிய உள்ளூர்ச் சேவைகளுக்காகும் செலவை மாநகரம் இறுக்க வேண்டியுள்ளது.

கனடாவின் மிகப்பெரிய நகரம் என்ற வகையில் ரொறன்ரோ மாநகரமே வேறு அநேகமான மாநகரங்களைவிட அதிக பண முடையைத் தாங்கி நிற்கிறது. எமது வருமானம் மத்திய, மாகாண அரசுகளின் வருமானத்துக்கு ஈடுகொடுத்து உயரவில்லை. அதேவேளை கனடாவில் குடியேறுவோர் வந்திறங்கும் மாநகரங்களுள் முதலிடம் வகிப்பது ரொறன்ரோ மாநகரமே. இந்நாட்டின் நிதிவள மையமாய் விளங்குவதும் இம்மாநகரமே. கனடாவைப் பொறுத்தவரை உலகளாவிய சுற்றுலாவாணர்கள் வந்திறங்கும் மாநகரமாகவும் இது விளங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எமது மக்கள்தொகை கிட்டத்தட்ட 26 இலட்சம். எனினும் எமது மாநகரத்தில் அன்றாடம் 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நடமாடி வருகிறார்கள் – எமது ரொறன்ரோ மாநகரத்தை தமது வாழ்விடம் என்று கொள்ளாமலேயே

அவர்கள் எமது அடிப்படைக் கட்டமைப்பில் தங்கியிருந்து, எமது சேவைகளைப் பயன்படுத்தி, உழைத்து, பயணித்து வருகிறார்கள்.

## மாநகரத்தின் தேவைகளுக்காகும் செலவை இறுப்பதற்கு அது ஏன் மேலும் கடன்படக் கூடாது?

மாநகரம் அதன் உடைமை வரியைக் கொண்டு காவல் துறைக்கே உச்சச் செலவு செய்கிறது. மாநகரம் பெறும் கடனுக்குச் செலுத்தும் வட்டியே அடுத்த உச்சச் செலவு. மாநகரத்தின் 2007ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்து நிலைமுதல் செலவில் 37 சதவிகிதம் வட்டிக்குக் கடன்பட்டே செலுத்தப்படுகிறது. அதாவது மாநகரம் உடைமை வரியாக அறவிடும் ஒவ்வொரு டாலரிலும் ஏறத்தாழ 13 சதம், கடனையும் வட்டியையும் செலுத்துவதற்கே பயன்படுத்தப்படுகிறது. கடன் ஏறுந்தோறும் உடைமை வரியிறுப்போரின் சுமையும் ஏறும்.

2007ல் ரொறன்ரோ மாநகரத்தின் கடன் $240 கோடியை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ரொறன்ரோ மாநகரத்தின் நிலைமுதல் வரவுசெலவுத் திட்டத்தைப் பார்க்கவும்.

## அடிப்படைக் கட்டமைப்புக்காகும் செலவை மாநகரம் ஏன் ஒதுக்குநிதியைக் கொண்டு இறுக்க முடியாது?



மாநகரங்கள் ஆண்டுதோறும் நிதிப் பற்றாக்குறைக்கு உட்பட முடியாது. பற்றாக்குறை நேரக்கூடாது என்பதற்காகவே ஒதுக்குநிதி இடப்படுகிறது. பாரிய உபகரண வகைகளை வாங்குவதற்கும், அவசர தேவைகளைக் கவனிப்பதற்கும் வேண்டிய பணத்தை ஒதுக்குநிதியிலிருந்தே மாநகரம் பெற்றுக்கொள்கிறது.

அடிப்படைக் கட்டமைப்பினைப் பேணும் அதேவேளை, அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு இன்று மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் ஏற்படும் பளுவைக் குறைப்பதற்கு ஒதுக்குநிதியையே மாநகரம் பயன்படுத்தி வந்துள்ளது. அதேவேளை ஒதுக்குநிதியின் பயன்பாடும் எல்லையை அண்மித்துவிட்டது.

சராசரி மாகாண ஒதுக்குநிதியைவிட சராசரி மாநகர ஒதுக்குநிதி மிகவும் குறைவு. மாநகர ஒதுக்குநிதியில் $400 கோடிக்கு மேற்பட்ட தொகை துண்டு விழுந்துள்ளது. எனினும் 2007ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்து நிலைமுதல் செலவில் 11 சதவீதம் ஒதுக்குநிதியிலிருந்தே செலுத்தப்படும்.

மாநகர ஒதுக்குநிதி பற்றிய மேலதிக விபரங்களுக்கு மாநகரத்தின் ஐந்தாண்டு அரசிறைத் திட்டத்தைப் பார்க்கவும்.

## மாநகரம் பிற செலவுகளைக் குறைத்து அடிப்படைக் கட்டமைப்புக்காகும் செலவை இறுக்காதிருப்பது எதற்காக?

ரொறன்ரோ எல்லைக்குட்பட்ட நகரங்கள் ஒரே மாநகரமாக இணைக்கப்பட்ட பின்னர் 1,476 முழுநேரப் பதவிகள் ஒழிக்கப்பட்டன. எனினும் அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு இன்று மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை மேற்கொள்வதற்குப் பணியாளர்கள் தேவை. வேறுசில திட்டங்களுள் புதிய சேவைக்

கூறுகளையும் மாகாணம் புகுத்தியுள்ளது. அதனாலும் செலவு மிகுந்துள்ளது. எமது மாநகரத்து மக்கள்தொகை பெருகியுள்ளதால், காவல்துறை, மக்கள் நலவாழ்வுத் துறை, போக்குவரத்துத் துறைகளில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையையும் நாம் பெருக்கியுள்ளோம்.

## இவ்வியக்கத்தை ஆதரிப்பதற்கு நான் என்ன செய்யலாம்?

உங்கள் ஆதரவை நீங்கள் பல வழிகளில் வெளிப்படுத்தலாம்: நீங்கள்:

- **www.onecentnow.ca** என்னும் இணையத் தளத்தில் காணப்படும் எமது விண்ணப்பத்தில் ஒப்பமிடலாம்.
- உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோர்க்கு கடிதம் எழுதலாம். தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதம் மாநகரத்துக்கு மீளக் கொடுக்கப்படுவதை நீங்கள் ஆதரிப்பதாக உங்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கவும்.
- உங்கள் வாகன மோதல்தாங்கிக்கென அல்லது அஞ்சல் பெட்டிக்கென ஓர் ஒட்டியைப் பெற்றுக்கொள்ளலாம், ஒரு சின்னத்தை அணியலாம்.
- இந்த ஆண்டில் மத்திய அரசுக்கான ஒரு தேர்தல் இடம்பெற்றால், பொருள்-சேவை வரியில் இப்பொழுதே ஒரு சதம்! நாடும் இயக்கத்துக்கு வேட்பாளர்களின் ஆதரவு பற்றி அவர்கள் அனைவரிடமும் வினா எழுப்பவும்.

## இவ்வியக்கத்துக்கு எவ்வளவு செலவு?

இவ்வியக்கத்துக்கு அண்ணளவாக $150,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவு முழுவதும் தயாரிப்பதற்கும் அச்சிடுவதற்குமே.

பொருள்-சேவை வரியில் ஒரு சதம் நாடும் இயக்கத்தை ஆதரிக்கும் பிற மாநகரங்களைப் போல் ரொறன்ரோ மாநகரமும் இத்தகைய ஓர் இயக்கத்தை மேற்கொள்ளாதிருக்கவே விரும்புகிறது. மாநகர வாசிகளும் தொழில்துறையினரும் இதில் முன்னின்று பங்குபற்றி, இச்செய்தியை நேரடியாகவே மத்திய, மாகாண அரசுகளிடம் முன்வைப்பதற்கு ஏதுவாகவே நாம் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளோம். மாநகர வாசிகள் தாம் மாநகரத்துக்குத் தெரிவிக்கும் ஆதரவை ஓர் இணையமூல விண்ணப்பத்தின் வாயிலாகவோ, நாடாளுமன்றத்துக்கு ஒரு கடிதம் அனுப்பியோ வெளிப்படுத்துவதற்கு இவ்வியக்கம் ஒரு வாய்ப்பளிக்கும். வீடுகளில் பயன்படுத்தும் ஒட்டி அல்லது அணிந்து திரியும் சின்னம் ஒன்றையும் மாநகர வாசிகளுக்கும் தொழில்துறையினருக்கும் மாநகரம் வழங்கும். அவற்றைப் பயன்படுத்தி இப்பொழுதே ஒரு சதம்! நாடும் இயக்கத்துக்கு தமது ஆதரவை அவர்கள் வெளிப்படுத்தலாம். இவ்வியக்கத்தைக் குறித்து ஒரு விழிப்புணர்வை ஊட்டுவதற்கு மாநகரத்தின் இலவச விளம்பர வெளிகளும் பயன்படுத்தப்படும்.